ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

# பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ மரவடியை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ மரவடியை ॥

## திருவரங்கத் திருப்பதி-2

‡மரவடியைத் தம்பிக்கு வான்பணையம்
  வைத்துப்போய்⋆ வானோர் வாழ⋆
செருடைய திசைக்கருமம் திருத்தி
  வந்துலகாண்ட⋆ திருமால் கோயில்
திருவடி தன் திருவுருவும்⋆
  திருமங்கை மலர் கண்ணும் காட்டி நின்று⋆
உருவுடைய மலர் நீலம் காற்றாட்ட⋆
  ஓசலிக்கும் ஒளி அரங்கமே (1)

‡தன் அடியார் திறத்தகத்துத்⋆
  தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல்⋆
என் அடியார் அது செய்யார்⋆ செய்தாரேல்
  நன்று செய்தார் என்பர் போலும்⋆
மன் உடைய விபீடணற்காய்⋆ மதில்
  இலங்கைத் திசை நோக்கி மலர்கண் வைத்த⋆
என்னுடைய திருவரங்கற்கன்றியும்⋆
  மற்றொருவர்க்காள் ஆவரே (2)

கருள் உடைய பொழில் மருதும்⋆
  கதக் களிறும் பிலம்பனையும் கடிய மாவும்⋆
உருள் உடைய சகடரையும் மல்லரையும்⋆
  உடைய விட்டோசை கேட்டான்⋆
இருள் அகற்றும் எறி கதிரோன்⋆
  மண்டலத்தூடேற்றி வைத்தேணி வாங்கி⋆
அருள் கொடுத்திட்டடியவரை⋆
  ஆட்கொள்வான் அமரும் ஊர் அணி அரங்கமே (3)

பதினாறாம் ஆயிரவர்⋆ தேவிமார்
பணிசெய்ய துவரை என்னும்⋆
அதில் நாயகராகி வீற்றிருந்த⋆
மணவாளர் மன்னு கோயில்⋆
புது நாள் மலர்க் கமலம்⋆ எம்பெருமான்
பொன் வயிற்றில் பூவே போல்வான்⋆
பொது நாயகம் பாவித்து⋆ இருமாந்து
பொன் சாய்க்கும் புனலரங்கமே (4)

ஆமையாய்க் கங்கையாய்⋆ ஆழ்
கடலாய் அவனியாய் அரு வரைகளாய்⋆
நான்முகனாய் நான்மறையாய்⋆
வேள்வியாய்த் தக்கணையாய்த் தானும் ஆனான்⋆
சேமம் உடை நாரதனார்⋆ சென்று
சென்று துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில்⋆
பூ மருவிப் புள் இனங்கள்⋆ புள்
அரையன் புகழ் குழறும் புனல் அரங்கமே (5)

மைத்துனன்மார் காதலியை மயிர்⋆
முடிப்பித்தவர்களையே மன்னர் ஆக்கி⋆
உத்தரை தன் சிறுவனையும் உய்யக்கொண்ட⋆
உயிராளன் உறையும் கோயில்⋆
பத்தர்களும் பகவர்களும்⋆
பழமொழிவாய் முனிவர்களும் பரந்த நாடும்⋆
சித்தர்களும் தொழுதிறைஞ்சத்⋆ திசை
விளக்காய் நிற்கின்ற திருவரங்கமே (6)

குறள் பிரமசாரியாய்⋆ மாவலியைக்
குறும்பதக்கி அரசுவாங்கி⋆
இறைப் பொழிதில் பாதாளம் கலவிருக்கை⋆
கொடுத்துகந்த எம்மான் கோயில்⋆
எறிப்புடைய மணிவரைமேல்⋆
இளஞாயிறெழுந்தாற் போல் அரவணையின் வாய்⋆

சிறப்புடைய பணங்கள் மிசைச்⋆
    செழு மணிகள் விட்டெறிக்கும் திருவரங்கமே (7)

உரம் பற்றி இரணியனை⋆ உகிர்
    நுதியால் ஒள்ளிய மார்புறைக்க ஊன்றி⋆
சிரம் பற்றி முடி இடியக் கண் பிதுங்க⋆
    வாய் அலறத் தெழித்தான் கோயில்⋆
உரம் பெற்ற மலர்க் கமலம்⋆
    உலகளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட⋆
வரம்புற்ற கதிர்ச்செந்நெல்⋆
    தாள் சாய்த்துத் தலை வணக்கும் தண் அரங்கமே (8)

தேவுடைய மீனமாய் ஆமையாய்⋆
    ஏனமாய் அரியாய்க் குறளும் ஆகி⋆
மூவுருவில் இராமனாய்⋆ கண்ணனாய்க்
    கற்கியாய் முடிப்பான் கோயில்⋆
சேவலொடு பெடை அன்னம்⋆ செங்கமல
    மலர் ஏறி ஊசல் ஆடி⋆
பூவணைமேல் துதைந்தெழு⋆ செம்பொடி
    ஆடி விளையாடும் புனல் அரங்கமே (9)

செருவாளும் புள்ளாளன் மண்ணாளன்⋆
    செருச்செய்யும் நாந்தகம் என்னும்
ஒரு வாளன்⋆ மறையாளன் ஓடாத
    படையாளன்⋆ விழுக்கை யாளன்⋆
இரவாளன் பகல் ஆளன் என்னை ஆளன்⋆
    ஏழுலகப் பெரும் பேராளன்⋆
திருவாளன் இனிதாகத்⋆ திருக்கண்கள்
    வளர்கின்ற திருவரங்கமே (10)

‡கைந்நாகத்திடர் கடிந்த⋆ கனல்
    ஆழிப் படை உடையான் கருதும் கோயில்⋆
தென்னாடும் வடநாடும் தொழநின்ற⋆
    திருவரங்கம் திருப் பதியின் மேல்⋆

மெய்ந்நாவன் மெய் அடியான் விட்டுசித்தன்⋆
    விரித்த தமிழ் உரைக்க வல்லார்⋆
எஞ்ஞான்றும் எம்பெருமான் இணையடிக்கீழ்⋆
    இணை பிரியாதிருப்பர் தாமே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥